MSSRF
Science for Sustainable Development

# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **03/07/2024** | முதல் | **07/07/2024** |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | **053/ 2024** | வெளியீட்டு நாள் : | **02/07/2024** | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (27.06.2024முதல் 01.07.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 07-07-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/06 | 28/06 | 29/06 | 30/06 | 01/07 | தேதி | நாள்-1 03/07 | நாள்-2 04/07 | நாள்-3 05/07 | நாள்-4 06/07 | நாள்-5 07/07 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 3 | 2 | 3 | 3 |
| 35 | 33 | 39 | 40 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 36 | 35 | 35 | 34 |
| 27 | 25 | 27 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 25 | 25 | 24 | 24 |
| 7 | 3 | 3 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 7 | 8 | 8 |
| 83 | 65 | 68 | 63 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 56 | 44 | 44 | 65 | 50 | | 40 | 40 | 50 | 40 | 50 |
| 11 | 16 | 10 | 4 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 14 | 8 | 10 |
| வட மேற்கு | மேற்கு | மேற்கு | வட கிழக்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 3, 4, 5, 6 மற்றும் 7 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 14 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(05-11 ஜூலை 2024):**

### மழைப்பொழிவு :

05-07-2024 - 11-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

### அதிகபட்ச வெப்பநிலை :

05-07-2024 - 11-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

05-11-2024 - 11-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நெல், தக்காளி, கால்நடை.**

**நெல்:**
வரும் நாட்களில் எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி ஆகஸ்ட் மாதத்தில் நெல் நடவு செய்ய திட்டமிடும் விவசாயிகள் பசுந்தாள் உரங்களான தக்கைப்பூண்டு, கொழிஞ்சி, சணப்பை ஆகியவற்றை விதைத்து 45 நாட்கள் கழித்து பூக்கும் தருணத்தில் அந்த இடத்திலே மடக்கி உழுவதன் மூலம் மண்ணின் அங்ககத் தன்மையை அதிகப்படுத்தலாம்.

**தக்காளி:**
தக்காளியில் செப்டோரியா இலைப்புள்ளி நோயின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இந்நோயானது தக்காளி செடியின் எந்த வளர்ச்சி நிலையிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம். இதன் அறிகுறியாக சிறிய சாம்பல் நிற, வட்ட இலைப் புள்ளிகள் காணப்படும்.

பாதிக்கப்பட்ட தாவர பகுதிகளை நீக்கி அழித்துவிட வேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 350 கிராம் என்ற அளவில் காப்பர் ஆக்சிகுளோரைடு மருந்தினை நீரில் கலந்து தெளிப்பதன் மூலமாகவும் இந்நோயை கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை:**
ஆடு வளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு. ஆடுகளின் எடை அதிகரிக்கவும், ஆட்டுகுட்டிகளின் இறப்பை தவிர்க்கவும் குடற்புழு நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகும்,

பொதுவாக ஜீலை முதல் செப்டம்பர் மாதங்களில் தட்டைப் புழுக்களுக்கான குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும்,

அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்கவும்.